கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்.

**O.S.No.96/2021** தேதி: **06.07.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 (ஞானசேகரன், த/பெ.சக்கரபாணி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1) வழக்கு சொத்தை நான் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு 2019-ல் விற்கிரையம் செய்துவிட்டேன் என்று எனக்கு எதிராக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கும் ராதாகிருஷ்ணனுக்கும் இடையே ஒப்பந்தம் ஏதும் கிடையாது. அப்படியிருக்கு எதன் அடிப்படையில் என் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

2) ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை விவரம் தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும் அதில் நான் சாட்சி கையொப்பமிட்டிருந்தேன். அந்த விற்கிரைய ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு போடப்பட்டது என்றால் 3 1/2 மாத காலத்திற்கு போடப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த உடன்படிக்கை என்றால் சரிதான் இது வா.த.சா.ஆ.**4**-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) வழக்கு சொத்துக்களை பொறுத்து தான் வா.த.சா.ஆ.4 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த விற்கிரைய உடன்படிக்கையை நானும் புகழேந்தியும் சேர்ந்து ராதாகிருஷ்ணனுக்கு விற்க முயற்சித்த போது ஏற்படுத்தப்பட்டது

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.07.06 12:09:13 +0530

என்றால் சரிதான்.

4) இந்த விவரம் அறிந்து ராதாகிருஷ்ணன் என்மீது ரெட்டிசாவடி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி விசாரணைக்கு நான் புகழேந்தி மற்றும் ராயல்வீராசாமி ஆகியோர் ஆஜர் ஆனோம் என்றால் சரியல்ல.

5) இந்த விற்கிரைய உடன்படிக்கை 05.04.2019-ல் காலாவதி ஆனது என்றால் சரிதான். இந்த விற்கிரைய உடன்படிக்கையின் விவரம் தெரிந்து வாதிகள் எங்கள் மீது நடவடிக்கை எடுத்ததால் தான் ராதாகிஷ்ணன் சொத்தை கிரையம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. இது தொடர்பான விவரங்கள் ராதாகிருஷ்ணன் சாட்சியம் அளித்தால் தான் தெரியும் என்றால் எனக்கு தெரியாது.

6) நான் ஏற்கனவே பிரச்சணைக்குரிய சொத்துக்களை விற்றுள்ளேன் என்றால் சரிதான் அதே போல் தான் இந்த சொத்தையும் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. ஆகவே தான் விற்கிரைய உடன்படிக்கை நிலுவையில் இருக்கும் போது 14.03.2019-ல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ராதாகிருஷ்ணனின் அனுமதியில் தான் கிரையம் பெற்றேன். ராதாகிருஷ்ணனின் அனுமதி பெற்றதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை வாய்மொழியாகத்தான் அனுமதி பெற்றேன்.

7) வா.த.சா.ஆ.4-ல் பக்கம் 5-ல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் வாதிகளின் உரிமைக்கு எதிராக செயல்பட்டு அவர்களை வெளியேற்றவேண்டும் என்ற நோக்கில் தான் வா.த.சா.ஆ.4-யை

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.07.06 12:09:18 +0530

ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

8) வாதிகளின் சட்ட அனுபவத்தை என்னால் தடை செய்ய முடியாது என்றால் வாதிகள் வழக்கு சொத்தின் அனுபவத்தில் இல்லை. ராதாகிருஷ்ணின் அனுமதி பெற்றிருந்தால் என் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல.

வா.த.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை முற்றிற்று. மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2026.07.06 12:09:22 +0530

***Additional District Munsif , Cuddalore.***